சப்ரகமுவ மாகாணக் கல்வித்திணைக்களம் - வாரப்பாடசாலை

பாடம்- தமிழ்

வாரம்-02 (JAN 25TH -JAN 29TH)

தரம் - 10

தயாரிப்பு -திரு.ஜெ.தேவராஜ்(கே/தெஹி/சரஸ்வதி த.வி )

**பின்வரும் தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு பொருத்தமான கருத்தை தெரிவு செய்க.**

1. **அண்ணல்** யானை அணி தேர்
   1.தலைவன் 2.வள்ளல் 3.அடிமை 4.உலோபி
2. **அணி** தேர் புரவி
   1.அழகு 2.அலகு 3.அளகு 4.பெருமை
3. வானுற **ஓங்கி** வளம்
   1.தாழ்ந்து 2.அழகு 3.பறந்து 4.உயர்ந்து
4. **வாடி** இருக்குமாம் கொக்கு
   1.அடங்காமை 2.தடங்கல் 3. அடங்கி 4.தடம்.
5. **கணக்காயர்** இல்லாத ஊரும்
   1.ஓதுதல் 2.ஓதுவிப்பவர் 3.கற்பவர் 4.கல்லாமை

**பின்வரும் தொடர்களை சந்திப்பிரித்து எழுதுக**

1. “உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறு சுவை போல்”
2. “பனையின் நிரள் பழுத்தொருவிதை”
3. “தன்மையிலான் ராயலிருப்பு மிம் மூன்று”
4. “கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கும்.”
5. “வானுறவோங்கி வளம்பெ றவளரினும் “

**<u>பின்வரும் அடிகளின் சிறப்புக்களை எடுத்துரைக்க</u>**

1.**உப்பில்லா கஞ்சியினை உண்ணும் அறுசுவை போல**

2.**தப்பிய கந்தை பீதாம்பரம் போல**

**3.யானை அனையவர் நண்பு**

**4.நாய் அனையார் கேண்மை**

**5.கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே**

.

**பின்வரும் வினாக்களுக்கு விடை செய்க.**

1. “மனங்கொண்டது மாளிகை” என்ற கருத்தை முதுமொழிவெண்பாவை அடிப்படையாக கொண்டு விளக்குக.
2. நட்பின் தன்மைத் தொடர்பாக நாலடியார் கூறும் விளக்கம் யாது?
3. இனிதான விடையங்களினைக் கூறும் இனியவை நாற்பது பாடலில் உள்ள சிறப்பினை ஆராய்க
4. “நீதிப்பாடல்கள் உவமை அணியின் ஊடாக நீதிக்கருத்தினை விளக்கி நிற்கின்றது .” நீர் கற்ற பாடல்களினை அடிப்படையாக கொண்டு ஆராய்க.
5. “திரிகடுகம் எனும் நூலானது ஒருவனுக்கு நன்மை பயக்காத மூன்று விடையங்களினை எடுத்து விளக்குகிறது.” ஆராய்க